## சௌராஷ்ட்ரா கல்லூரி மாணவ, மாணவியருக்கான

## இலவச மதிய உணவுத் திட்டம் தொடக்கம்

செப். 3:

சௌராஷ்ட்ரா கல்லூரியில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களின் கல்விக்கு உதவும் வகையில், ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வரும் இலவச மதிய உணவுத் திட்டத்தின் இந்த ஆண்டிற்கான தொடக்க விழா இன்று (03.09.2026) சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 2003ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்பட்டு வரும் இத்திட்டத்தை, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட Quality Knitwear Pvt Ltd நிர்வாகிகள் திரு. J. B. குமரன் மற்றும் திரு. K. R. ஸ்ரீதர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மாணவ, மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்கு பேருதவியாக விளங்கும் இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் மனமுவந்து நன்கொடை வழங்கி வரும் SOUCO Civil Engineers Association, ஹோபுலா முனுசாமி ஐயர் டிரஸ்ட், ABC Badminton Club, சௌராஷ்ட்ரா கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (SCAAN) மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கி, தொடக்க விழாவை சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் Dr. D. R. குமரேஷ், கல்லூரித் தலைவர் திரு. P. J. பன்ஷிதர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திரு. K. A. வெங்கடேஷ்வரன், திரு. J. B. சரவணன் மற்றும் கல்லூரி முதல்வர் கேப்டன் Dr. K. R. ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, விழாவில் பேசிய கல்லூரி முதல்வர் கேப்டன் Dr. K. R. ஸ்ரீனிவாசன், சௌராஷ்ட்ரா கல்லூரி நிர்வாகக் குழுவின், குறிப்பாக கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் Dr. D. R. குமரேஷ் அவர்களின் ஆர்வமிகு முயற்சியால், 2003ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் எவ்விதத் தொய்வுமின்றி வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும், இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் மாணவ, மாணவியர்கள், தங்களது பொருளாதாரச் சிரமங்களைப் பற்றி கவலைப்படாமல் கல்வியில் முழு கவனம் செலுத்தி, வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடையத் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொண்டார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் கல்விப் பயணத்திற்கு ஊக்கமும் ஆதரவும் அளித்து வரும் இத்திட்டம், சமூக அக்கறையுடன் கல்வி நிறுவனங்களும், முன்னாள் மாணவர்களும், நன்கொடையாளர்களும் இணைந்து செயல்படுவதற்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது.